Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 73

யாழ்ப்பாணம் சித்திரை 13 ஸபர் 29 திங்கட்கிழமை (26-4-71)

சிவமந்திர நாதம்

கவியோகி சுத்தானந்தபாரதியார் அவர்கள் இயற்றிய

சிவமந்திர நாதம்

என்னும் அரிய நூலை பஜனை சபைகள், ஜனசமூக நிலையங்கள், அத்தாட்சிப்பததிரம கொடுத்து நேரில் பெற்றுக்கொள்ளவும்.

மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

# கேகாலையில் மேலும் ஐந்து இடங்கள் மீட்கப்பட்டன

## பயங்கரவாதிகள் ஓடி மறைகிறார்கள்

கோட்டை, திங்கள்

**கேகாலை மாவட்டத்தில் தேடுதல் வேலைகளில் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினர் பயங்கரவாதிகளினால் பாவிக்கப்பட்ட பயங்கர ஆயுதங்கள், வெடிமருந்து, துப்பாக்கிகள் போன்றவற்றை பெருமளவில் மீட்டு, மேலும் 5 இடங்களை அரசாங்க கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளதாக பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு நேற்று அறிவித்தது.**

அரநாயக்கா, ரம்புக்கணை தியந்தகம, மொரதோட்டை, அம்பலாங்கொடை, எல்பிட்டிய, பிட்டிகல, டெனியாய ஆகிய இடங்களில் சகஜ நிலை திரும்பியுள்ளது.

பயங்கரவாதிகள் பாதுகாப்புப் படையினரிடம் பின்வாங்கி காட்டுக்குள் ஓடி மறைந்து வருவதாகவும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளினால் மூடப்பட்டிருந்த எல்பிட்டியா, பிட்டிகல பொலிஸ் நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது அம்பலாங்கொடை, எல்பிட்டி, பிட்டிகல பஸ்சேவை வழமைபோல் நடைபெற்று வருவதாகவும்காரியாதிகாரி அலுவலகம் ஆஸ்பத்திரி மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

எல்பிட்டியாவுக்கு அடுத்ததாகபயங்கரவாதிகளின்கைவசமிருந்த மிகப் பெரியநகரமான டெனியாயப்பகுதியில் சகசநிலை திரும்பி வருகிறது. கட்டுப்பிட்டிய, பெட்டவல பாலங்கள் திருத்தப்படுகின்றன.

எல்பிட்டியாவில் பயங்கரவாதிகளிடமிருந்து மேலும் பல ஆயுதங்கள் மோட்டார் வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 19 துப்பாக்கிகள், 220 கைக்குண்டு 3ஜீப்வண்டிகள், 6 பஸ்வண்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

### களவுபோன பணம் மீட்பு

எல்பிட்டிய மக்கள் வங்கியில் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தின் ஒரு பகுதி மீட்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

நாள்பூராவும் வழமைபோல் சகசநிலை திரும்பியுள்ளதாகவும், வழமைபோல் பஸ்சேவை, உணவு விநியோகம் நடைபெற்று வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

### வங்கி நேரம்

இன்று முதல் சகல வங்கிகளும் காலை 9-30 மணிமுதல் 12 30 மணிவரை அலுவலுக்காகத் திறக்கப்பட்டிருக்கும்.

### மிதிபலகைப் பிரயாணம் தடை

இன்று முதல் இ. போ ச பஸ்களில் மிதிபலகைப் பிரயாணம் மீண்டும் தடைசெய்யப்பட்டுள்ளது. அவசரகால நிலைமை காரணமாக பஸ் போக்குவரத்துக் கஷ்டங்களைப் போக்குமுகமாக கடந்த பலதினங்களாக நீக்கப்பட்டிருந்தமிதிபலகைப் பிரயாணத்தடையை மீண்டும் இன்றுமுதல் அமுலுக்குக் கொண்டுவருவதாகவும் பஸ் சேவைகள் திருப்திகரமாக இயங்குவதாலும் பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதாலும் இந்தத் தடையினால் பொதுமக்களுக்குக் கஷ்டம் ஏற்படாதென்றும் இ. போ. ச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கல்லறைக்குள் வெடி குண்டுகள்!

கோட்டை, ஞாயிறு

பாணந்துறையிலுள்ள பொதுச் சவக்காலையொன்றிலுள்ள கல்லறைக்குள் சுமார் 50 அல்லது 60 குண்டுகள் தயாரிக்கக்கூடிய பொருட்களை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

16 கைக்குண்டுகள் 60 டைனமைற்றுகள், வயர்கள் ஆணிகள்,ரசாயனப் பொருட்கள் ஆகியவற்றை இந்தக் கல்லறையிலிருந்து பொலிஸார் கண்டெடுத்தனர்.

11 இளம் இளைஞர்களும் ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளரும் இதுசம்பந்தமாக கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களைப் பாணந்துறைமாஜிஸ்திரேட் முன் ஆஜர்செய்தபோது இன்ஸ்பெக்டர் எம் மகேஸ்வரம் மேற்கண்ட தகவலை கோர்ட்டில் தெரிவித்தார்.

## சோயுஸ் 10 வெற்றியுடன் திரும்பியது

மாஸ்கோ, ஏப். 24

கடந்ததிங்கட்கிழமை விண்வெளிக்கு அனுப்பப்பட்ட ரஷ்ய ஆளில்லா விண்வெளி நிலையத்துடன், ரஷ்யாவினால் மூன்று வீரர்களுடன் அனுப்பப்பட்ட சோயுஸ்10 என்ற விண்கலம் ஐந்தரை மணித்தியாலம் வரை பூமியின் சுற்றுப்பாதையில் நகர்ந்து கொண்டுவிட்டுநேற்றுப் பத்திரமாக பூமியில் வந்திறங்கியுள்ளதாக டாஸ் செய்திஸ்தாபனம் அறிவித்தது.

அண்டவெளியில்விண்வெளிநிலையம்அமைத்து மேலும் பல வீரர்கள் கலந்துகொண்டு நீண்டகாலம் விண்வெளியில் சஞ்சரித்து ஆராய்ச்சி நடத்தும் முதல் நடவடிக்கையாக இது [illegible]

## பயங்கரவாதிகள் பற்றிய தகவல்களுக்கு சன்மானம்

கோட்டை, ஞாயிறு

நாட்டின் எந்தப்பகுதியிலானாலும் பயங்கரவாதிகளையோ அவர்கள் அமைத்திருக்கும் முகாம்களையோ காட்டிக்கொடுக்கும் நம்பத்தகுந்த தகவல்களை அளிப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படுமென பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு பொதுமக்களுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளது.

மேலும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; நாட்டின் எந்த மூலையிலாவது பயங்கரவாதிகள் இருந்தால் அவர்கள் பற்றியும், அவர்கள் அமைத்திருக்கும் முகாம்கள், துப்பாக்கிக் கிடங்குகள், கைக்குண்டு வைத்திருக்கும் இடங்கள், மற்றும் ஆயுதங்கள் வைத்திருக்கும் இடங்கள் பற்றிய நம்பத்தகுந்த தகவல்களை அரசாங்கத்திற்குத் தெரிவிப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். இதுபற்றிய தகவல்களைக் கொடுக்க விரும்பும் பொதுமக்கள் தங்கள் இடங்களுக்கு அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ இராணுவ நிலையத்திலோ தெரிவிக்கலாம் இப்படித் தெரிவிக்கப்படும் தகவல்கள் கொடுப்பவர்கள் பற்றிய செய்திகள் அந்தரங்கமாக வைக்கப்படும்.

இவ்விதமான தகவல்களைக் கொடுப்பவர்களுக்கு கொடுக்கப்படும் சன்மானம், அவர்கள் கொடுக்கும் தகவல்களைக் கொண்டு கண்டுபிடிக்கப்படும் பொருட்களின் தகமை. தன்மைகளைப் பொறுத்து நிர்ணயிக்கப்படும்

## வியட்னும் கொள்கைக்கு அமெரிக்காவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

வாஷிங்டன், ஏப். 25

அமெரிக்காவின் வியட்னும் கொள்கைக்கு கண்டனம் தெரிவிக்கும் மாபெரும் கண்டன ஊர்வலம் வாஷிங்டனில் நேற்று நடைபெற்றது. இதில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். இக்கண்டன ஊர்வலம் 5 மணிநேரம் நடைபெற்றது. ஊர்வலத்தினர் அமெரிக்க வியட்னும் கொள்கைக்கு எதிரான கோஷங்களை கோஷித்தனர்.

மற்றுமோர் ஊர்வலம்சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்றது இதில் 2 லட்சத்திற்கும்மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். வியட்னும் போரில் ஈடுபட்ட முதிய வீரர் ஒருவர் நாற்காலியில் முன்னேசெல்ல அதைத்தொடர்ந்து ஊர்வலம் சென்றது பசிபிக் மாகடலுக்கு அருகேயுள்ள பூங்காவைநோக்கி இவ்வூர்வலம் சென்றது.

இவ்விரு ஊர்வலங்களும் மிகஅமைதியாக நடைபெற்றன.

## நிதி உதவி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாவட்ட சமூகசேவைப் பகுதி பயங்கரவாதிகளின் நடவடிக்கையினால் உயிரிழந்த பொலிஸ், பாதுகாப்புப்படையினரின் நிதிஉதவிக்கு 2000 ரூபா வழங்கியுள்ளது.

## ஊரடங்கு நேரம்

இன்று மாலை
6-30
மணி முதல்
நாளை காலை
5-30
மணி வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார், வவனியா, யாழ். மாவட்டத்தில்

# துப்பாக்கி வைத்திருப் போருக்கு 30-ம் திகதி வரை அவகாசம்!

யாழ்ப்பாணம், திங்கள்
வடமாகாணத்தில் லைசென்ஸ் பெற்ற துப்பாக்கிகளும் தோட்டாக்களும் வைத்திருப்பவர்கள் அவைகளைப் பொலிசாரிடம் ஒப்படைப்பதற்கு இம்மாதம் 30-ம் திகதிவரை அவகாசமளிக்கப்பட்டுள்ளது என்று வடமாகாண பொலிஸ் அதிபர் திரு. ஆர் சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

ஏற்கனவே 48 மணிநேரத்துக்குள் துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் பொலிசாரிடம் சமர்ப்பிக்கும்படி கோரிக்கைவிடுக்கப்பட்டிருந்தது ஆனல் இப்பொழுது 30-ம் திகதிவரைக்கும் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சலுகையைப் பொதுமக்கள் பயன்படுத்திக்கொண்டு தம்வசமிடுக்கும் துப்பாக்கிகளை தமக்கு அருகாமையிலுள்ள பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்துவிட வேண்டும். 30-ம் திகதிக்குப் பின்னர் எதுவித அவகாசமும் கொடுக்கப்படமாட்டாது. இதனை மீறுகிறவர்கள் றிமாண்டில் வைக்கப்படுவார்கள் என்பது மட்டுமல்ல, அவசரகால சட்டத்தை மீறிய பாரதூரமான குற்றமாகவும் கருதப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

வடமாகாணத்துக்குட்பட்ட வவனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வாழும் அனைவருக்கும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதை மீறி துப்பாக்கிகளை எவரும் தம் வீடுகளில் வைத்திருந்தால் அவசரகால சட்டத்தின்கீழ் தண்டனைக்குள்ளாவார்கள்.

## இந்தோனேஷியாவில் 157 கம்யூனிஸ்டுகள் கைது

ஜாகர்த்தா, ஏப். 23

இந்தோனேஷியா ஆட்சிக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 157 கம்யூனிஸ்ட்டுகளை இந்தோனேஷிய இராணுவம் கைது செய்துள்ளதாக ஜகர்த்தாவிலிருந்து கிடைத்தசெய்திகள் தெரிவித்தன.

இந்தோனேஷியாவில் வருகிற ஜூலை மாதம் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இத்தேர்தலின்பொழுது இந்தோனேஷிய உயர்மட்ட இராணுவ அதிகாரிகளை, கொலைசெய்ய இவர்கள் திட்டமிட்டிருந்தார்களாம்.

இவர்களின் இரகசிய சதித்திட்டத்தை இராணுவத்தினர் கண்டு பிடித்துள்ளனர் இவர்களின் வேலைத்திட்டம் மற்றும் தஸ்தாவேஜுக்களை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

## லைசன்ஸ் வழங்க அதிகாரம் வழங்குக

கம்புறுபிட்டியா, ஞாயிறு
வானெலி லைசன்ஸ்களை மக்களுக்கு வழங்க உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரம் வழங்கவேண்டும்.

திகொடை கிராமசபையில்சமீபத்தில் நடைபெற்ற அதன் கூட்டமொன்றில் மேற்கண்டவாறு அரசாங்கத்தைக் கோருந் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தின் பிரதிகள் தபால் தந்தித் தொடர்பமைச்சருக்கும், உள்ளூராட்சிமன்ற பொதுநிர்வாக உள்நாட்டமைச்சு அமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## கந்த புராண உரை நூல்

சுழிபுரம், சனி
சுழிபுரம் யோகி கா. கார்த்திகேசுவினால்எழுதப்பட்ட கந்தபுராண யுத்தகாண்ட உரைநூல் வெளியீடு வைகாசி விசாக தினத்தன்று பறளாய் முருகமூர்த்தி கோவிலில் வெளியிடப்படவிருக்கின்றது. கொழும்புத்துறை ஆகிரியகலாசாலை இந்துமா மன்றம் இதனை வெளியிடுகிறது.

கூட்டுறவில்

## இலங்கையருக்கு லண்டனில் பயிற்சி

லண்டன், ஏப். 25
கூட்டுறவுப் பரிசோதகர்கள் இருவர் சென்ற வாரம் கூட்டுறவுக்கல்வியில் பயிற்சி பெற பிரிட்டன் சென்றுள்ளனர். பயிற்சிபெற சென்றுள்ள திரு யு. பீ பண்டாரநாயக்கா, திரு. ஜே. பி. அபயக்கோன் ஆகிய இவ்விருவரும் இலங்கை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் சுமார் 20 ஆண்டுகள் வரை கடமையாற்றியுள்ளனர்.

லோபரா சர்வகலாசாலையிலுள்ள சர்வதேச கூட்டுறவு அபிவிருத்தி பயிற்சி வகுப்புகளை மேற்கொள்ளும் இவர்களுக்கு கொழும்புத்திட்ட தொழில்நுட்ப கூட்டுறவு அமைச்சின் கீழ் உபகாரச்சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது.

## றிமாண்டில்

கோட்டை, ஞாயிறு
கிருண்பாஸ், ஹெனமுல்லை என்னுமிடத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவரைப் பொலிசார் கைது செய்து கொழும்பு மேலதிகநீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். நீதவான் சந்தேகநபரை அடுத்தமாதம் 5-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். சந்தேக நபரின் வீட்டில் கைக்குண்டுகள் பயங்கர ஆயுதங்கள் போன்றவை இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இதேயிடத்தைச் சேர்ந்த இன்னுமொரு வாலிபரையும் கிளர்ச்சிக்காரரைச் சேர்ந்தவர் என்ற சந்தேகத்தில் பொலிசார் கைது செய்தனர். 28-ம் திகதி வரை அவரை றிமாண்டில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

## மேட்டுநில பயிர்ச் செய்கை

குருநகர், ஞாயிறு
வேலணைக் கிராமசபை எல்லைக்குள் இருக்கும் பாழடைந்த குளங்களை மீண்டும் வெட்டி இப்பகுதிகளில் உள்ள அரசாங்கக் காணிகளில் மேட்டுநில பயிற் செய்கையை விருத்திசெய்வதற்கான திட்டமொன்றை செயற்படுத்துவதென அண்மையில் கூடிய வேலணை கிராம அபிவிருத்திச்சபையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு தேவையான பணத்தைக் கணக்கிட்டுத் தருமாறு இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தீவுப்பகுதி காரியாதிகாரி கேட்டுக்கொண்டார். இத்திட்டத்திற்கான ஏற்பாடுகளை வேலணை கிராமசபைத் தலைவர் திரு. க. சதாசிவம் கவனித்து வருகின்றார்.

## 7 பிள்ளைகளின் தாயருக்கு காயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
7 பிள்ளைகளின் தாயாரான நாச்சிமார் கோவிலடியை சேர்ந்த கமலாம்பிகை என்பவர் குத்துக் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில், பொலிஸார் பாலசுப்பிரமணியம் என்பவரை கைதுசெய்தனர். விசாரணையின் பின் சந்தேக நபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். சந்தேக நபர் சார்பில் புறக்டர் ஏ. அன்ரனி ஆஜரானார்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இரும்புப் பெட்டி:
இறக்குமதி செய்த ஜேர்மன் தேச 2 1/4 அடி பெட்டி ஆறு லிவர் பூட்டுகள், நெருப்புப் பாதுகாப்புக் கொண்டது. ஸ்டான்டுடன் விற்பனைக்குண்டு. சுந்தரம் பிறதர்ஸ், மருந்துக்கடை, 73, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 2772

### தேவை

கடதாசிப் பொருட்கள் உற்பத்தி செய்யும் ஸ்தாபனத்தில் படிப்பு அற்றவர்கட்கு வேலை வசதி உண்டு. பை ஒட்டும் அனுபவம் உள்ளோர்க்கு விசேஷ சலுகை உண்டு. நேரில் மனுச்செய்யவும். சி. ஆர். எஸ். என்டபிறைசஸ், 390, 392, பருத்தித்துறை வீதி, அரசடி, யாழ்ப்பாணம். 2771

### கல்வி

கல்வி
சகல லண்டன் கணக்கியல் பரீட்சைகளுக்கும் புதிய வகுப்புகள், 3 சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் 5-5-1971-ல் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு: அதிபர், ஸ்ரீ மீனாட்சி வர்த்தகக் கல்லூரி, கொட்டடி, யாழ்ப்பாணம். 2768

கல்வி:
1972-ம் ஆண்டு மேமாதம் நடைபெறும் லண்டன் சேம்பர் ஆப் கொமர்ஸ் பரீட்சைக்கு ஆங்கிலம், சிங்களம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகிய பாடங்களுக்கு புதிய வகுப்புகள் 5-5-1971ல் ஆரம்பமாகின்றன ஸ்ரீ மீனாட்சி வர்த்தகக் கல்லூரி, கொட்டடி, யாழ்ப்பாணம். 2769

1971 ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் க. பொ. த. (சாதாரண/உயர்தர) பரீட்சைகளுக்கு வர்த்தக வகுப்புகளும், 1971-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் இன்ஸ்ரிரியூட் ஒவ் புக்கீப்பேஸ், லண்டன் Institute of Book Keepers, London (Diploma & Professional) பரீட்சைக்கு புதிய வகுப்புகளும் 5-5-1971-ல் ஆரம்பமாகின்றன. ஸ்ரீ மீனாட்சி வர்த்தகக் கல்லூரி. சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 2770

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்
தற்பொழுதுள்ள நிலைமை காரணமாக தமிழ் காங்கிரஸ் பொதுச்சபை கூட்டம் ஒத்திபோடப்பட்டுள்ளதாக, தமிழ் காங்கிரஸ் நிர்வாக காரியதரிசி திரு. வி. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

நிலைமை சீரானபின் பொதுச்சபைக்கூட்டம் நடைபெறுமென்றும் திரு. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

## அண்ணகழகம் வெற்றி

நாவற்குழி, ஞாயிறு
நாவற்குழி அண்ணா விளையாட்டுக்கழகத்திற்கும் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் நாவற்குழி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் அண்ணா விளையாட்டுக்கழகம் ஓர் இன்னிங்ஸ் 37 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், சனி
சாவகச்சேரி வடக்கு கண்டுவில் கண்ணகை அம்மன் ஆலய மகாகும்பாபிஷேகத்தை யூலை மாதம் 30ம் திகதி நடாத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.


ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00 பி.ப.1-30
சிவாஜி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி. ப 1-15
மாஸ்டர் பிரபாகர் பேபி சுமதி - லெட்சுமி நடித்த
வா ராஜா வா

6-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30 பி.ப. 1-30
எம். ஜி. ஆர். (இருவேடங்களில்) சரோஜாதேவி ரத்னா நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை

அடுத்த வெளியீடு
கெப்பிட்டல் - பிளாஸா - மைலன் திரைகளில்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா மனோகர், அசோகன், ஆனந்தன் நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
விநாயகா பிக்சர்ஸ்
மூன்றெழுத்து
(மர்மச்சித்திரம்)

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
காலை 10-30, பி.ப 2-30
Audi Murphy in BULLET FOR A BAD MAN

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 9-30, 1-30
சிவாஜி - K. R. விஜயா நடித்த
தங்கை

வெஸ்லி சினிமா
சாவகச்சேரி
தினசரி10-00, 1-30மட்டும்
ஏ வி எம். ராஜன் — சாரதா நடித்த
துலாபாரம்

ராஜா (யாழ்ப்பாணம்)
காலை 10-00பி. ப 1-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த
மாடப்புறு
(புதிய கொப்பி)

மனோகரா (யாழ்ப்பாணம்)
Daily 10-30a.m
Spell Binding Suspence Thriller
BANDITS in ROME
தினசரி பி. ப. 1-45
சிவாஜி — ஜெய்சங்கர் சரோஜாதேவி நடித்த
அன்பளிப்பு

றீகல் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00
பி. ப. 1-30 மணி
ரஞ்சன் — அசோகன் நடித்த
[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உணவு விநியோகம் பற்றி ஆராயவே யாழ். வந்தேன்"

தபாலமைச்சர்

'வாழ்க்கையே ஒரு பிரச்னையாக இருக்கிறது இவையெல்லாம் ஒரு பிரச்னையா?' என்று மெதுவாகச் சிரித்துக்கொண்டே கேட்டார் தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர்.

யாழ்ப்பாண மாநகர சபைக் கமிட்டி அறையில் நடந்த உறுப்பினர்கள் கூட்டத்தின்போதே இப்படி ஒரு அங்கத்தினரைப் பார்த்துக் கேட்டார் அமைச்சர்.

சென்ற வியாழக்கிழமை நடந்த இந்தக் கூட்டத்தில் சில மணி நேர யாழ். விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் ஒரு மணி நேரத்தை யாழ் மாநகர சபையில் புதிய மேயர் திரு. அல்பிரட் துரையப்பாவுடனும், அங்கத்தவர்களுடனும் கழித்தார்.

தமது வட்டாரத்திலுள்ள "சின்ன'ப் பிரச்னை ஒன்று பற்றி ஒரு அங்கத்தினர் அமைச்சரிடம் புகார் தெரிவித்தார். அப்போதுதான் நாடு இப்போது எதிர்நோக்கியுள்ள மிக நெருக்கடியான நிலைமையைச் சுட்டிக் காட்டி. 'வாழ்க்கை ஒரு பிரச்னையாக இருக்கிறது. என்ற பதத்தை அமைச்சர் நாசூக்காக உபயோகித்து. நிலைமையை தெளிவாக்கினார்.

தமது கட்சியைச் சேர்ந்த திரு அல்பிரட் துரையப்பா மேயராகத் தெரிவு செய்யப்பட்டதையொட்டியே யாழ்ப்பாணத்துக்கு தாம் விஜயம் செய்ததாக அடிபடும் 'அர்த்தமற்ற வதந்தி' குறித்து அவர் சிரித்தார்.

## ஏன் வந்தேன்?

"வடபகுதியில் உணவு, எண்ணை பொருட்களாலும், மற்றும் போக்குவரத்தாலும் ஏற்பட்டுள்ள கஷ்டம் பற்றி நசில் தெரிந்து கொள்வதற்காகவே நான் இங்கு வந்தேனேயொழிய இப்போது நாடு இருக்கிற அவசர நிலையில் புதிய மேயரை வாழ்த்த வந்தேன் என்பது நம்பக்கூடியதா?'' என்று அமைச்சர் சொன்ன போது—

எப்படி எப்படியெல்லாம் நினைத்தமாதிரி சிலர் கதைத்துக்கொள்கிறார்கள் என்பதை எண்ணிய போது சிரிப்பதா அழுவதா என்று எனக்குத் தெரியவில்லை!

நாடு மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறது. இந்நேரத்தில் யாழ்ப்பாணத்தில் ஒருசிலமணிநேரமாவது இருக்க நான் கொடுத்து வைத்தவன். இங்குள்ள கஷ்டங்களை நேரில் அறிந்து கொண்டு செல்கிறேன் உடனுக்குடன் தீர்த்துவைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பேன்'' என்று அமைச்சர் உறுதியும் தெரிவித்தார்.

"ஊரடங்குச் சட்டத்தை அரசு பிறப்பித்ததால் போக்குவரத்து சேவையில்லாமல் தென்னிலங்கையிலிருந்து வரமுடியாமல் கஷ்டப்பட்ட வடபகுதி மக்களுக்கு கப்பல் ஒன்றை ஏற்பாடு செய்து அனுப்பிவைத்திருக்கலாமே'' என்று உறுப்பினர் ஒருவர் அமைச்சரை கேட்டார்.

## மக்களைப் புரிந்தவன்

அமைச்சர் சொன்னார்.

"என்னைப் பொறுத்தவரையில் நான் பொதுமக்களுடைய உள்ளங்களைப் புரிந்துகொண்டவன். அவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதே என் சிந்தனையாக இருந்துவருகிறது. கப்பல் பற்றி நான் யோசிக்காமல் இருக்கவில்லை ஆனால் அப்படி கப்பலில் அங்கிருந்து அவசரமாக வடக்கு திரும்பவேண்டிய மக்களை அனுப்பிவைத்தால் "மீண்டும் ஒரு 58 ஏற்பட்டுவிட்டதா என்ற கொந்தளிப்பு பலர் உள்ளத்திலும் ஏற்படும். இவைகளை யோசித்துத்தான் அந்தத் திட்டம் பற்றி யோசிக்கவில்லை ஆனாலும் அரசு தனது சக்திக்கப்பால் சென்று தினம் பல விமானசேவையை நடாத்தி போக்குவரத்து கஷ்டத்தை ஓரளவு நீக்கிவைத்தது" என்று மிகவும் தெளிவாக அழகாக விளங்கப் படுத்தினார்.

"ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்படுகின்ற வேளைகளில் எல்லாம் கட்சிபேதம் தலைதூக்கக் கூடாது. தேர்தல்களுடன் அவைகள் எல்லாம் மறைந்துவிடவேண்டும். சின்னஞ்சிறு நாட்டில் வாழும் எமக்கு 'சின்னத்தனமாக' எண்ணங்கள் எழக்கூடாது. ஒருமைப்பாடும் ஒற்றுமையும் அமைதியும் ஏற்பட உழைக்கவேண்டும்' என்று மிகவும் உருக்கமான வேண்டுகோளை அன்றைய கூட்டத்தில் விடுத்தார்.

மாநகர சபை உறுப்பினர்கள் பலரும் தமது வட்டாரப் பிரச்னைகள் குறித்தும் அவைகள் தீர்த்துவைக்கப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள அமைச்சர் ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள்.

குருநகர் வடிகால் நாற்றம் குறித்தும், வீடில்லாப் பிரச்னை குறித்தும் உறுப்பினர் எம். எஸ் பேரின்பநாயகம் அமைச்சரிடம் எடுத்துக்கூறினார். படம்வரைந்து அனுமதிபெற்று வீடுகட்ட வேண்டியநிலை இருப்பதால், யாழ் நகர மக்கள் பலரும் பலவிதமான கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்று எம் ஜி. பஷீர் கூறினார். யாழ். வாடி வீட்டு பிரச்னை குறித்து கண்டனம் எழுப்பினார் எம் ஏ சி எஸ் ஏ காதர் இவைகள் எல்லாவற்றுக்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அமைச்சர் உறுதி தெரிவித்தார்.

## பிரதமருக்கு முழு ஆதரவு

நாடுஎதிர்நோக்கிக்கொண்டிருக்கிற நெருக்கடியான சூழ்நிலையில் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு பிரதமர் எடுக்கும் சகல பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் யாழ். மாநகர சபை சகல ஒத்துழைப்பையும் அளிக்கும் என்று புதிய மேயரின் இறுக்கமான ஆதரவாளர்களில் ஒருவரான திரு எம் ஏ சி எஸ் ஏ காதர் அமைச்சரிடம் தெரிவித்தார்.

புதிய மேயர் தெரிவில் எதிர்த்துப் போட்டியிட்ட இலங்கையின் முதலாவதும், ஒரேஒருவருமான மாநகர சபை பெண் உறுப்பினரான திருமதி சுவாமிநாதர் துணிச்சலாக அமைச்சரை நோக்கி தமது கருத்துக்களைப் 'பட் பட்' என்று கூறினார்.

"ஒவ்வொரு மேயரும் பதவிக்கு வரும்போதெல்லாம் தமக்கு விரும்பியபடியெல்லாம் பாரபட்சமாக நடவடிக்கைகள் மேற்கொள்கிறார்கள். ரேட்டுக்குப் பக்கத்தில் சிலருக்கு வீடுகட்டவும், சிலருக்கு வீடுகட்டக் கூடாது என்று உத்தரவு வழங்குகிறார்கள் இப்படியான நிலை மாறினால் தான் யாழ்ப்பாண நகருக்கு விடிவு' ஏற்படும்'' என்று திருமதி சுவாமிநாதர் கூறிய போது, அமைச்சருக்கு அருகே இருந்த புதிய மேயர் திரு, துரையப்பா அவர் கருத்தை ஆமோதிப்பது போன்று தலையை அசைத்து 'இப்படியான நிலைமை இனி ஏற்படாது'' என்று உறுதி கூறினார், அமைச்சரும் அப்படியான நிலைமை ஏற்படாது என்று கூறினார்.

## அமைச்சரின் அருமையான பதில்

திருமதி சுவாமிநாதர் அமைச்சரிடம் இன்னொரு புகாரைக் கூறியபோது, அமைச்சர் கூறிய பதில்; "அம்மா உங்களுடைய கையில்தான் நிர்வாகம் இருக்கிறது. நீங்கள்தான் இந்நகரத்தின் பொறுப்பாளிகள், நீங்களே உங்கள் பிரச்னைகளை மேயருடன் கலந்துசெய்துகொள்வதற்கு என்ன தடை இருக்கிறது?'' இப்படி அமைச்சர் பணிவாகக் கூறிய பதிலையடுத்து, திருமதி சுவாமிநாதர் புகார்கோரிக்கைகளை விடுக்கவில்லை.

நெருக்கடியான இந்தநேரத்தில், தலைமுழுகிய பிரச்னைகள் பலவற்றுக்குத் தீர்வுகாண நேரமில்லாது இருக்கும் அமைச்சர் குமாரசூரியர் யாழ்ப்பாணத்தில் சிலமணி நேரம் கழித்தது இங்குள்ள கஷ்டங்களை நேரில் தெரிந்துநடவடிக்கை மேற்கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது என்றே சொல்லலாம்.

-ராஜகோபால்,

இலவசக்கல்வியை

## 'நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும்'

கோட்டை, ஞாறுயி

'அரசாங்கத்தால் அளிக்கப்படும் இலவசக் கல்வியை நல்ல முறையில் இந்நாட்டு மக்கள் பயன்படுத்துவதில்லை. உலகின் ஏனைய நாடுகளோடு இலங்கையை நாம் ஒப்பிட்டு நோக்குமிடத்து இலங்கை பெருந்தொகையான பணத்தை நாட்டின் கல்வி வளர்ச்சிக்குச் செலவு செய்கிறது'

கல்வியமைச்சின் மேலதிக நிரந்தரச் செயலாளர் திரு. கே. எச். எம். சுமதிபால உடமித்த மகாவித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இலவசக் கல்வியை அனுபவிக்கும் இலங்கையர் அதிர்ஷ்டசாலிகள் அபிவிருத்தியடைந்துள்ள மேற்கத்திய நாடுகளில்கூட இந்த வசதியில்லை இந்த அரிய வசதியை இந்நாட்டு மாணவர்கள் யாவரும் நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும்

......

## 24 மணி நேரமும் வேலை நடைபெறுகிறது

கோட்டை, ஞாயிறு

இலங்கையிலுள்ள சகல துறைமுகங்களிலும் இருபத்துநான்கு மணி நேர வேலைகள் நடைபெற்று வருவதாகத்தெரிவிக்கப்பட்டது

ஊழியர்கள் பொருட்களை ஏற்றுமதி செய்வதிலும் இறக்குமதி செய்வதிலும் சுறுசுறுப்பாகவுள்ளனர் என்றும் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் உடனடியாக அங்கிருந்து அகற்றப்படுகின்றன என்றும், விரைவில் அவைகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சுவீப் முடிவுகள்

கோட்டை, சனி

தேசிய லொத்தர் சபையின் 343-வது சுவீப் சீட்டிழுப்புமுடிவுகள் வருமாறு:

முதல்பரிசு:

06 H 0442 ரூ. 43,810

2 ம் பரிசு

05 C 0070 ரூ 17,524

3-ம் பரிசு

18 D 0565 ரூ 4,381

தலா ரூபா 219-05 சதம் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 02 A 0686 | 06 B 0448 |
| 03 B 0992 | 23 B 0514 |
| 28 B 0909 | 19 C 0492 |
| 36 C 0853 | 15 C 0116 |
| 15 C 0010 | 05 D 0460 |
| 12 D 0021 | 11 D 0552 |
| 15 D 0459 | 24 D 0890 |
| 11 D 0875 | 13 D 0977 |
| 12 E 0886 | 35 E 0196 |
| 36 E 0865 | 33 E 0069 |
| 01 E 0506 | 07 E 0414 |
| 14 F 0454 | 15 F 0392 |
| 06 F 0702 | 10 F 0355 |
| 10 F 0090 | 06 F 0079 |
| 27 F 0032 | 13 F 0434 |
| 10 F 0585 | 10 G 0278 |
| 36 G 0918 | 12 G 0606 |
| 36 G 0706 | 14 G 0757 |
| 29 G 0954 | 02 H 0888 |
| 36 H 0280 | 16 H 0511 |
| 22 H 0090 | 23 H 0656 |
| 36 H 0036 | 36 H 0642 |
| 12 H 0207 | 07 J 0272 |
| 27 J 0407 | 30 J 0844 |
| 19 J 0419 | |
| 34 K 0510 | 19 K 0072 |
| 16 K 0010 | 23 L 0001 |
| 34 L 0224 | 04 L 0243 |
| 24 M 0592 | 16 M 0519 |
| 07 N 0600 | 34 N 0515 |
| 36 N 0393 | 22 N 0558 |
| 04 O 0034 | 24 O 0368 |
| 07 O 0794 | 28 O 0634 |
| 10 O 0622 | 18 O 0732 |
| 24 O 0760 | 07 O 0794 |
| 18 P 0421 | 04 Q 0923 |
| 06 Q 0325 | 04 Q 0924 |
| 13 Q 0428 | 20 Q 0149 |
| 13 Q 0257 | 05 Q 0769 |
| 24 R 0814 | 10 S 0749 |
| 10 S 0407 | 02 T 0777 |
| 30 U 0283 | 10 U 0426 |
| 13 U 0833 | 15 U 6472 |
| 01 V 0810 | 01 V 0892 |
| 25 V 0516 | 13 W 0768 |
| 13 W 0590 | 22 W 0818 |
| 07 X 0424 | 05 X 0552 |
| 04 X 0839 | 01 X 0703 |
| 30 Y 0380 | 11 Y 0108 |
| 36 Y 0591 | 27 Z 0968 |
| 13 Z 0237 | 18 Z 0624 |

(இவை யாவும் உறுதிப் படுத்தப்படவேண்டும்)

## 'சமாதானம் மூலம் லட்சியத்தை அடையலாம்'

கோட்டை, ஞாயிறு

'அரசாங்கச் சொத்துக்களைச் சேதப்படுத்துவதாலும் நாட்டின் வளத்தைச் சிரழிப்பதாலும் நாம் சோஷலிஸத்தை வளர்த்துவிட முடியாது.'

இவ்வாறு ஸ்ரீ லங்கா ஜாதிக குரு சங்கமயத் தலைவர் திரு. பீற்றர் டி. சில்வா தெரிவித்துள்ளார். சிங்களத் தகவல் ஒலிபரப்பு இலாகா மூலம் விடுத்துள்ள செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

திரு. சில்வா மேலும் குறிப்பிட்டதாவது:

'சோஷலிஸ நாடுகளில் புரட்சிகள் நடைபெற்றுள்ளன, அப்புரட்சியின்போதெல்லாம் கொலை, அராஜகம் இடம்பெறவில்லை. இவ்வித புரட்சிவாதிகள் நியாயமற்ற ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடினார்கள்.

உலகம் பல துறைகளில் மாற்றம் கண்டுள்ளது. இரத்தக்களரியின்மூலம் முன்னர் அடைந்த லட்சியங்களை இப்போது சமாதானம் மூலம் பெறலாம். 1970-ம் ஆண்டு பெற்ற மக்கள் வெற்றி இதற்கொரு உதாரணம்.'

— —

## மீண்டும் தொலைபேசித் தொடர்பு

கோட்டை, ஞாயிறு

பயங்கரவாதிகளின் தாக்குதலினால் பாதிக்கப்பட்டிருந்த தொலைபேசித் தொடர்பு சேவை மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளது ஆயினும் அமைச்சர், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் மற்றும் அத்தியாவசிய தேவைகள் ஆகியவற்றுக்குமே இச்சேவை வழங்குதலில் முதன்மை யளிக்கப்படும். உள்நாட்டு வெளிநாட்டுத் தபால் தந்திகளை வினியோகிக்கும்சேவையில் தபால் கந்தோர்களும் நேற்றுமுன் தினம்மூடுபட்டுள்ளன.

......

## 72,000 தொன் இறக்குமதி

கோட்டை, ஞாயிறு

இம்மாதம் முதல் இருவாரங்களிலும் கொழும்புத் துறைமுகத்தில் 72328 தொன் நிறையுள்ள அரிசி, மா. சீனியாகியன இறக்கப்பட்டுள்ளன

இதைவிட திருக்கோணமலைத் துறைமுகத்தில் 2600 தொன் மாவும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதே நேரத்தில் 15747 தொன் எடையுள்ள பொருட்கள் இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளன.

## பதுக்கல் பொருட்கள் விநியோகம்

பருத்தித்துறை, ஞாயிறு

சில தனிப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் அத்தியாவசிய பொருட்களைப் பதுக்கி வைத்து நாட்டில் செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்குகிறார்களெனக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து பொலிசார் வடமராட்சியின் பல்வேறு இடங்களில் அப்பொருட்களை உடனடியாக வெளியே கொண்டுவந்து அதலத்திலேயே விநியோகம் செய்தனர் இவர்களுக்கு இராணுவத்தினரும் உதவி புரிந்தனர் மண்ணெண்ணெய், சீனி, உள்ளி ஆகிய பொருட்களும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன,

......

## எம். பி. நன்கொடை

கோட்டை, ஞாயிறு

அரசாங்கப் படையினர் நிதிக்காக ஹிங்குரக்கொட ஆட்சிமன்ற உறுப்பினர் திரு பி. பி. உனந்தென்ன தமது ஏப்ரல் மாதச் சம்பளத்தை வழங்க முன்வந்துள்ளார்.

......

## பிராமண நலன்புரி சங்கம்

அரியாலை, ஞாயிறு

பிராமண சமூக நலனையும் சைவசமய வளர்ச்சியையும் முன்வைத்து அகில இலங்கை பிராமணர் நலன்புரி சங்கம் அமைக்கப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு
நாடு உனக்கு என்ன செய்கிறது என்று கேட்காதே. நாட்டிற்கு நீ என்ன செய்கிறாய் என்று கேள்.
—ஜோன் கென்னடி

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷம் சித்திரை மாதம் 13 - ந் திகதி ( 26 - 4 - 71)

# 9 பத்திரிகைகளுக்கு தடை!

கோட்டை, ஞாயிறு
இலங்கையிலிருந்து வெளிவரும் 9 பத்திரிகைகளை பத்திரிகை அதிகாரி தடை செய்துள்ளார்.

கம்கறுபுவ, ஜனதாவிமுக்தி, கினிகுப்பு, ரதலங்கா, ரத்துகல, விரோதயா ரத்துகொக்குளை தர், மசட்டன, தொழிலாளர் செய்தி ஆகிய பத்திரிகைகளே தடைசெய்யப்பட்ட பத்திரிகைகளாகும்.

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதியில்லாமல் ஒருவர் எந்த விதமான செய்திகளையோ பிரசுரங்களையோ வெளியிடமுடியாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய நெருக்கடி

பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயகா இலங்கைப் பொதுமக்களுக்கு விடுத்துள்ள மிக உருக்கமான உறுதியான வேண்டுகோளைப்பற்றி நேற்று இப்பத்திகளில் எழுதியிருந்தோம். இலங்கை சுதந்திரமடைந்து 23 ஆண்டுகளுக்கிடையே பல பல சங்கடங்கள் ஏற்பட்டனவெனினும், இன்று நம்மை எதிர்நோக்கும் ஒரு தேசிய நெருக்கடிபோன்ற ஆபத்தான நிலைமை இதுவரை கண்டதில்லை என்பது பிரதமரின் பேச்சிலிருந்தே தெளிவாகிறது.

நிலைமை அபிவிருத்தி அடைந்துவருகிறதெனினும், பழையபடி அமைதி ஏற்பட்டு நாடு ஜனநாயக வழியில் முன்னேறச் செய்யும் வேலை சுலபமானதன்று. நமக்கு உதவிசெய்த வெளிநாடுகளைப் பற்றி பிரதமர் நன்றியுடன் குறிப்பிட்டார். வெளிநாடுகளின் உதவிகளால் மட்டும் இங்கு நிலைமை சீர்பட முடியாது, ஜனநாயகத்திலும் அமைதியான முன்னேற்றத்திலும் நம்பிக்கையுள்ள பொதுமக்கள் ஒவ்வொருவரினது, எல்லாக்கட்சிகளினதும் ஒன்றுபட்ட ஒத்துழைப்பு இச்சமயம் எவ்வளவு அவசியமென்பதை விளக்கத்தேவையில்லை.

புதிதாக விடுதலை அடைந்த இலங்கை போன்ற ஒருநாட்டில் அரசியல் ஒற்றுமை மிகவும் இன்றியமையாததாக இருக்கையில், கட்சி அரசியலும் தேர்தல்முறையும், நாட்டின் ஒற்றுமையை துரதிருஷ்டவசமாக பலப்படுத்துவதாக இல்லை. கட்சிகளால் போட்டிகள் வளர்ந்து மக்களிடையேவேற்றுமைகள் அதிகரிக்கவும், வகுப்புவாதப் பூசல்கள் வளரவும் செய்து முன்னேற்றத்துக்குப் பெருந்தடையாக இருந்துள்ளதை அனுபவத்தில் கண்டிருக்கிறோம். இதனால் கட்சிமுறை அரசியலே கூடாதென்ற பலமான ஒரு கருத்தும் நாட்டில் நிலவுகின்றது. குறைந்தது இன்னும் 50 வருடங்களாவது கட்சி அரசியல் போட்டிகள் இல்லாமல், தேசிய அரசாங்கம் செயல்படுமாயின், நாட்டில் பொதுமக்களிடையேயும் ஒற்றுமையும் அமைதியும் ஏற்பட்டு, நாடுமுன்னேறவும் வழிபிறக்கும். இன்று ஏற்பட்டுள்ளதுபோன்ற ஒரு பெரிய ஆபத்தும் உருவாகாமல் தடுத்திருக்கக்கூடும்.

அனுபவத்தால் நாம் பாடம் கற்கவேண்டியுள்ளது. கட்சி அரசியலுக்கு இப்போதாவது ஒரு முற்றுப்புள்ளிவைத்து, ஜனநாயகத்திலும், அமைதியான முன்னேற்றத்திலும் நம்பிக்கையுள்ள எல்லாக் கட்சிகளும் அடங்கிய ஒரு தேசிய அரசாங்கத்தை இப்போது அமைக்க முடியுமாயின் இன்றைய தேசிய நெருக்கடியை சமாளிக்க அது பெரிதும் உதவக்கூடியதாக இருக்கும். இந்த நெருக்கடியை வெற்றிகரமாக சமாளிப்பதுடன் பிரச்னை தீர்ந்துவிடாது. நாட்டின் வேலையில்லாப் பிரச்னையையும் வாழ்க்கைச் செலவு முதலிய சிக்கல்களையும் தீர்க்க மக்களால் தெரிவு செய்யப்பட்ட எல்லாக்கட்சி பிரதிநிதிகளும் சேர்ந்து ஒத்துழைக்கும். ஒரு தேசிய அரசாங்கம் பல விதங்களிலும் அதிக பலமாகவும் வாய்ப்புள்ளதாகவும் இருக்கும். இதனால் பொதுமக்களிடையேயும் புதிய நம்பிக்கையும் ஒற்றுமையும் ஏற்படக்கூடும்.

இரண்டாவது உலக யுத்தம் ஏற்பட்டபோது அந்த தேசிய நெருக்கடியை சமாளிக்க, பிரிட்டனில் பல கட்சிகளுமடங்கிய ஒரு தேசிய அரசாங்கத்தை அமைத்து அந்த நெருக்கடியை வெற்றிகரமாகத் தீர்த்தனர். இன்று நம் இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும் சாதாரணமானதல்ல. இதை வெற்றிகரமாகத் தீர்த்து நாடு அமைதியானவழியில் முன்னேறும்படி செய்யவும், மக்கள் கட்சிவேற்றுமைகளை மறந்து, ஒன்றுதிரண்டு ஒத்துழைக்கவும் ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவது பலவிதங்களிலும் இன்றியமையாததாகும்.

## அரசுக்கு உதவுவோம்

கோட்டை, ஞாயிறு
இலங்கை நிர்வாக சேவை ஊழியர்கள் சங்கம் தம் ஒத்துழைப்பையும்ஆதரவையும் நாட்டின் இக்கட்டான இவ்வேளையில் அரசாங்கத்திற்கு நல்குவதாகவும் அதன் தேவைகட்கு இச்சங்க ஊழியரை பயன்படுத்தும் படியும் கூறிப் பிரதமருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது. ......

ஆசிரியரின்

## ஏப்ரல் மாத சம்பளம்

கோட்டை, ஞாயிறு
அரசாங்க பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு ஏப்ரல் மாத வேதனத்தை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு தலைமையாசிரியர்களையும் கல்லூரி அதிபர்களையும் அவ்வப்பிரதேச கல்வி அதிபர்களுடன் அல்லது பிரதம கல்வியதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கல்விமா அதிபர் அறிவித்துள்ளார். ......

## பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது

கோட்டை, ஞாயிறு
இம்மாதம் 22ந் திகதி நடைபெறவிருந்த நொத்தாரிசுகள் இறுதிப்பரீட்சை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இம்மாதம் 28, 29, 30ந் திகதிகளில் நடைபெறவிருக்கும் இலங்கை நிர்வாக சேவை ஐந்தாம் பிரிவு நியமனப்பரீட்சையும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

......

கடற்றொழிலாளருக்கு

## எச்சரிக்கை

கோட்டை, ஞாயிறு
மறு அறிவித்தல் கொடுக்கும்வரை குடாக்கள், மற்றும் உள்நாட்டு நீர்நிலைகள் ஆகியவற்றில் ஊர் அடங்கும் சட்டம் அமுலில் உள்ள நேரத்தில்கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்கக் கூடாதென எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்கள்.

நேற்றுமுன்தினம் தகவல் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ......

## ஒரு சங்கத்தின்கீழ் இயங்கவேண்டும்

கோட்டை, ஞாயிறு
நாட்டிலுள்ள ஆயுர்வேத வைத்தியர்கள் யாவரும் அரசாங்கத்தால் ஒரு சங்கத்தின் கீழ் கொண்டுவரப்படவேண்டும்.

சிலாபம் — புத்தளம் மாவட்ட ஆயுர்வேத வைத்தியர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கோரும் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேற்படி சங்கத்தின் வென்னப்புவவிலுள்ள தலைமைக்காரியாலயத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

## யாழ். நகரிலிருந்து சகல இடத்துக்கும் பஸ் சேவை

### வழமை போல் நடக்கிறது

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து சகல இடங்களுக்கும் தற்பொழுது வழக்கம்போல் பஸ்சேவை நடைபெற்று வருகிறது.

அநுராதபுரம், மாத்தளை மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, முல்லைத்தீவு போன்ற தூர இடங்களுக்கு தற்பொழுது பஸ் சேவை நடைபெற்று வருகிறது. யாழ் பஸ் நிலையத்திலிருந்து தூரஇடங்களுக்கான பஸ்கள் தினமும், காலையில் புறப்படுகின்றன.

பஸ் நிலையத்திலிருந்து கிட்டிய இடங்களுக்கு, தினமும் கடைசிபஸ் பிற்பகல் 4மணிக்கு புறப்படுகிறது.

### ரயில் சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7-42 க்கு அநுராதபுரத்துக்கு புகையிரதசேவை விடப்படுகிறது என்றும் அங்கிருந்து கொழும்புக்கு பஸ் சேவை நடைபெறும் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூர் புகையிரத சேவை யாழ்ப்பாணத்திலிருந்து காலை 8-15 க்கு கிளிநொச்சிக்கும் பிற்பகல் 1-14 க்கும் 3-45 க்கு பளைக்கும் புறப்படும் 3-45 க்குப் புறப்படும் ரயில் 4-47 க்கு பளை நிலையத்தைச் சேரும்.

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறைக்கு காலை 6-59 க்கும் 7-47 க்கும் பி. ப. 3-47 க்கும் 4-45க்கும் புறப்படும். 4-45 க்குப் புறப்படும் புகையிரதம் 5-25 க்கு காங்கேசன்துறை சென்றடையும்.

......

## சுழல்காற்றால் துறைமுகவேலை பாதிப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு
காங்கேசன்துறை துறைமுகத்துக்கு 11,000 தொன் மாவை ஏற்றிக்கொண்டு வந்துள்ள அவுஸ்திரேலிய கப்பலிலிருந்து மா இறக்கும் வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. நேற்றுக் காலை திடீரென வீசிய சுழல்காற்றால் மா இறக்குவது ஸ்தம்பிதமாகியது.

கப்பலில் இருந்து 5 வள்ளங்களில் சுமார் 1500 மா மூடை ஏற்றப்பட்டு கரைக்கு கொண்டுவரும் போது இடையில் திடீரென சுழல்காற்று வீசியதால் ஒன்றும்செய்யமுடியாது வள்ளக்காரர் தத்தளித்தனர்.

சுழல்காற்று ஓரளவு தணிந்தபின் துறைமுக காவலாளிகளினதும் உணவுக் கட்டுப்பாட்டு பாதுகாவலரதும் மற்றும் பொதுமக்களினதும் உதவியால் மா மூடைகள் கரைக்குகொண்டு வந்து சேர்க்கப்பட்டன.

புங்குடுதீவு

## கண்ணகி அம்மன் கோவில் திருவிழா

யாழ்ப்பாணம், திங்கள்
புங்குடுதீவு கிழக்கு கண்ணகி அம்மன் கோவில் மகோற்சவம். 30-4-71 வெள்ளிக்கிழமை கொடியேற்றம் 11 5-71 பூங்காவனத்திருவிழா, தெப்பத்திருவிழா 12 நாட்களும் ஊரடங்குசட்ட அமுல்களுக்கு அமைந்து திருவிழா சிறப்பாக நடைபெறும்

—...

## வடகொரிய நடவடிக்கைக்கு இந்தோனேஷிய இளைஞர் கண்டனம்

ஜகார்த்தா, ஏப்ரல் 25
இந்தோனேஷியாவிலுள்ள வடகொரிய தூதுவராலயத்துக்கு அணி வகுத்துச் சென்ற இந்தோனேஷிய இளைஞர் அத் தூதுவராலயத்தில் இலங்கையில் பயங்கரவாதிகளுக்கு வடகொரிய தூதுவராலயம் தூண்டுதலளித்ததை கண்டித்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

கம்யூனிஸ்ட் அல்லாத உலக இயக்கத்தைச் சேர்ந்த அவ்விளைஞர்கள் வெளிநாட்டு விடயங்களில் கம்யூனிஸ்ட் நாடுகள் தலையிடுவதை நிறுத்த வேண்டுமென்றும் இந்தோனேஷிய அரசாங்கம் கம்யூனிஸ்ட் வாதிகள் தலையிடுவதை கண்டிக்க வேண்டுமென்றும் கேட்டுள்ளது.

வடகொரிய தூதுவராலயம் அவ்வறிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன் வெளிநாட்டு அமைச்சரிடம் அதனை சமர்ப்பிக்கும்படியும் தெரிவித்துள்ளது.

...—

## ரவிவர்மா முத்திரை

புதுடில்லி, ஏப். 25
இந்தியாவின் சரித்திரப் புகழ் பெற்ற ஓவியர் ரவிவர்மாவின் உருவத்தை பொறித்த முத்திரை ஒன்று இம்மாதம் 29-ந் திகதி வெளியிடப்படவுள்ளது.

ரவிவர்மாவின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் இம்முத்திரையில் ரவிவர்மாவுடன், அவரது திறமையின் சின்னமாக விளங்கும் அன்னமும் தமயந்தியும் இடம்பெறவுள்ளன.

— —

## பண்ணிசை வகுப்பு ஆரம்பம்

புங்குடுதீவு, ஞாயிறு
'நெறியில்லா நெறிச் செல்லும் இளைஞர்களை நந்நிலைப்படுத்த தேவாரப்பண்ணிசை வகுப்பு அவசியமாகும். இந்த முயற்சியை ஆரம்பித்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்,

## 600 எழுதுவினைஞர்

கோட்டை, ஞாயிறு
மேமாதம் முதலாந் திகதி 600 எழுதுவினைஞர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறதென்றும், இறுவேலைகளிலுள்ள மேலும் 200 பேர் எழுதுவினைஞர் சேவைக்கு நியமிக்கப்படுவர் என்றும் பொதுநிர்வாக அதிகாரி திரு. எச். எஸ் வனசிங்கி தெரிவித்துள்ளார்.

## ஐவுளித் தொழிற்சாலை ஆரம்பம்

கோட்டை, ஞாயிறு
எட்டியாந்தோட்டை, எகலியகொடை, ஹொரவப்பொத்தான கொட்டாவ, மஸ்கெலியா, ருவான்வெல, ஹோமகம ஆகிய ஏழு இடங்களிலும் நிர்மாணிக்கப்பட்ட ஐவுளித் தொழிற்சாலைகள் ஆகஸ்ட் மாதம் வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன

இந்த ஏழு ஐவுளித் தொழிற்சாலைகளிலும் அந்தந்தப் பகுதியிலிருந்து இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொன்றிலும் 400 பேர் வேலைக்கமர்த்தப்படுவர் என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## விற்பனையாளர் தேவை

அளவெட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களில் "ஈழநாடு" பத்திரிகை விற்பனை செய்ய விற்பனையாளர்கள் உடனடியாகத் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் உடன்நேரில்தொடர்பு கொள்ளவும். நிர்வாகி, "ஈழநாடு", யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங் கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org